# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

**********

முறையீட்டு மனு எண்.204/2019/பே.1
ஆணை நாள்: 26-02-2020.

திரு. A.F.முபாரக்,
33/161, N.T. ரோடு,
எஸ்.எம்.நகர்,
மேட்டுப்பாளையம்,
கோவை மாவட்டம்–641305. — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்
காரமடை பேரூராட்சி,
கோவை மாவட்டம். — எதிர் மனுதாரர்.

**ஆணை.**

கோவை மாவட்டம், காரமடை பேரூராட்சி, எண்.33/161, N.T. ரோடு, எஸ்.எம்.நகர், மேட்டுப்பாளையம் பகுதியினைச் சேர்ந்த திரு,A.F. முபாரக் என்பவரது 04.12.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.12.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 204/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கோவை மாவட்டம், காரமடை பேரூராட்சி, வார்டு எண்.2, SF.No. 706 (1) திரு முருகேசன் மற்றும் (2) திருமதி பிரேமா ஆகியோர் கட்டிட அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டி வருவதாகவும், இது குறித்து காரமடை பேரூராட்சி செயல் அலுவலருக்கு 05.09.2019 அன்று மேற்படி இடத்தினை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க கோரியதாகவும், ஆனால் செயல் அலுவலர் திருமதி.எஸ்.பிரேமா என்பவர் 4,000 சதுர அடிக்கு கட்டிடம் கட்டியுள்ளது தெரிந்தும் 1,900 சதுர அடிக்கு சொத்து வரி விதித்துள்ளதாகவும் இதன் மூலம் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு புகார் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

24.12.2019 நாளிட்ட கோவை மாவட்டம், காரமடை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் மேற்படி புகார் தொடர்பாக அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் காரமடை பேரூராட்சியில் திரு.முருகேசன் என்பபவர் க.ச.எண். 706–ல் 1,920 சதுர அடியில் வணிக வளாக கட்டிடம் கட்ட 05.08.2016ல் விண்ணப்பம் அளித்ததாகவும் மேற்படி விண்ணப்பத்தின் பேரில் காரமடை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 909/2016அ.3/நாள். 22.09.2016ல் கட்டிட உரிமம் எண் 182/2016–17 நாள் 22.09.2016ன்படி தரைதளத்தில் 1,920 சதுர அடிக்கு மட்டும் கட்டிடம் கட்ட அனுமதி

வழங்கப்பட்டதாகவும், மேற்படி கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்படாத நிலையில் கூடுதலாக பேஸ்மெண்ட், தரைத்தளம், முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் வணிக கட்டிடம் கட்ட அனுமதி கோரி 05.01.2018 அன்று வரப்பெற்ற விண்ணப்பம் பேரூராட்சி செயல் அலுவலரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்பதால் இதற்கான அனுமதி வழங்கிட பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 16/2018அ.3/நாள் 05.01.2018ன்படி கோவை நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இதுவரை மேற்படி அனுமதி வரப்பெறவில்லை எனவும், கட்டிடமும் முழுமையாக கட்டி முடிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளதுடன், அனுமதி வரப்பெற்று கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டவுடன் சொத்து வரி விதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

திருமதி எஸ்.பிரேமா என்பவர் க.ச.எண். 706–ல் வணிக கட்டிடம் கட்ட 30.01.2018ல் பேரூராட்சிக்கு விண்ணப்பம் அளித்ததாகவும் அதனடிப்படையில் செயல் அலுவலரின் செயல்முறை ந.க.எண். 80/2018/அ.3/நாள் 21.03.2018, கட்டிட உரிமம் எண். 331/2017–18/நாள் 21.03.2018ன்படி தரை தளத்தில் 1.911 சதுர அடிக்கு மட்டும் கட்டிடம் கட்ட வரைபட அனுமதி வழங்கப்பட்டதாகவும், அனுமதிக்கப்பட்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 03.01.2019 நாளிட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் தரைதள கட்டிடம் 1.911 சதுர அடிக்கு மட்டும் 15.02.2019 ம் தேதியில் 956 சதுர அடி கொண்ட இரு சொத்து வரி விதிப்பு முறையே 14605 மற்றும் 14606 என விதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். திருமதி பிரேமா என்பவரால் கூடுதலாக கட்டப்பட்டுள்ள முதல் தள வணிகக் கட்டிடத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 897/2019/அ.3 நாள் 03.12.2019ன்படி கோவை நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநருக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும் நாளது தேதி வரை அனுமதி பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே புகாரி குறிப்பிட்டுள்ள இரு நபர்களுக்கும் பேரூராட்சியின் அதிகார வரம்பிற்குட்பட்ட அளவிற்கே அனுமதி வழங்கப்பட்டதாகவும், கூடுதல் அனுமதி வழங்குதல் குறித்து நகர் ஊரமைப்புத்துறைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02.01.2020 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 17.02.2020 அன்று ஆஜரான காரமடை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலரின் 24.12.2019 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துக்களையே தெரிவித்துள்ளதுடன் திருமதி எஸ்.பிரேமா என்பவரின் கூடுதல் கட்டிட அனுமதிக்காக கூராய்வு கட்டணமாக ரூ.1,200/– செலுத்த நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநரிடமிருந்து தகவல் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். திருமதி பிரேமா என்பவரின் கட்டிடத்திற்கு இரு வரி விதிப்புகள் செய்துள்ள விவரத்தினை ஆய்வு செய்து இரு தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரர் 17.02.2020 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்துள்ளதுடன் தனது 15.02.2020 நாளிட்ட கடிதத்தில் திருமதி எஸ்.பிரேமா என்பவர் தனது கூடுதல் கட்டிடம் தொடர்பாக நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநருக்கு அனுமதி கோரியுள்ளதைத் தொடர்ந்தும் கூராய்வு கட்டணம் செலுத்த கடிதம் பெறப்பட்டதைத் தொடர்ந்தும் தனது முறையீட்டு மனுவினை திரும்பப் பெறுவதாக தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

20.02.2020 நாளிட்ட காரமடை பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் திருமதி எஸ்.பிரேமா என்பவர் தான் பேரூராட்சி அனுமதியின் பேரில் 1,911 சதுரஅடி அளவில் கட்டப்பட்ட கட்டிடத்தினை இரு பகுதிகளாக பிரித்து தனித்தனியே இரு கதவுகள் அமைத்து வணிக ரீதியாக இரு வரிவிதிப்புகள் கோரியதாகவும் இது குறித்து வரி வசூலர்மூலம் நேரில்ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இரு வரி விதிப்புகள் விதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. புகாருக்குட்பட்ட நபர்களுக்கு பேரூராட்சியின் வரம்பிற்குட்பட்ட விதிகளின்படியே கட்டிட அனுமதி வழங்கப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவது மற்றும் கூடுதல் கட்டிடங்களுக்கு கோவை மண்டல நகர் ஊரமைப்புத்துறைக்கு அனுமதி வேண்டி கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டது குறித்து பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவ

விசாரணைக்கு ஆஜராக ஆணையிட்டும் ஆஜராகாததோடல்லாமல், தனது முறையீட்டு மனுவினையே திரும்பப் பெற்றுக் கொள்வதாக 15.02.2020 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். புகார் மனு எழுதுவதும் பின்பு ஏதோ ஒரு காரணத்திற்காக திரும்ப பெறுவதும் ஏற்புடைய செயல் இல்லை. எனவே இது போன்ற தேவையற்ற முறையற்ற செயலில் ஈடுபட்ட மனுதாரருக்கு ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலவுத் தொகையாக விதிக்கப்படுகிறது. இத்தொகையினை 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு செலுத்தவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. இந்நிலையில் முறையீட்டு மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

27.2.20

செயலாளர்.

27/2/2020

பெறுநர்

1.திரு. A.F.முபாரக்,
33/161, N.T. ரோடு,
எஸ்.எம்.நகர்,
மேட்டுப்பாளையம்,
கோவை மாவட்டம்–641305.

2.செயல் அலுவலர்,
காரமடைபேரூராட்சி,
கோவை மாவட்டம்–641104.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோவை மண்டலம்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.

நகர்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)